மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***13297—திருமதி கு. உமா மகேஸ்வரி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகப் பொதுச் செயலாளர் மக்கள் தலைவி சின்னம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் பகுதியில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலமாக தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் 500 ஏக்கர் பரப்பளவில் ரூ.13 கோடி முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, விளாத்திகுளம் தொகுதியில் பிறிதொரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

திருமதி கு. உமா மகேஸ்வரி: *மக்கள் நலனே தன் நலன் என்று மக்களுக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்து தவ வாழ்வு வாழ்ந்த*

2017 ஜனவரி 31]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) விளாத்திகுளம் தொகுதியில் சொன்ன பல திட்டங்களையும், சொல்லாத பல திட்டங்களையும் நிறைவேற்றி, மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்கள் கழகப் பொதுச் செயலாளர், தியாகத் தாய், மரியாதைக்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவாற்றலின் வளர்ச்சிக்கேற்ப உழவின் உயர்விற்கேற்ப தொழில்கள் பெருகவேண்டும் என கனவு கண்ட மகாகவி பாரதியார் பிறந்த மண் எட்டயபுரம் உள்ள தொகுதி விளாத்திகுளம். படித்த இளைஞர்கள் பலர் இங்கு வேலையில்லாமல் வெளிநாடுகளுக்கும், வெளி மாநிலங்களுக்கும் செல்லும் நிலை உள்ளது. எனவே, இளைஞர்களின் மேன்மைக்கு தொழில்நுட்பப் பூங்கா அமைய வேண்டும் என்பதை புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் மரியாதைக்குரிய சின்னம்மாவின்கீழ் நடைபெறும் அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கு ஆவன செய்யுமா என பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி உட்கார்ந்து கொண்டு பேசாதீர்கள். மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.*

திருமதி கு. உமா மகேஸ்வரி: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அருகிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா உள்ளது என்று சொன்னார்கள். எனவே, எங்கள் தொகுதியில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியான விளாத்திகுளத்திற்கும், திருநெல்வேலிக்கும் இடையே உள்ள தூரம் வெறும் 55 கி.மீ. தான். எனவே, திருநெல்வேலியில் அவர்கள் எல்லோரும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்துகொண்டிருக்கிறது. அதன்படி, அந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில்* Syntel International Private Limited-*க்கு 100 ஏக்கரும்,* Sutherland Global Services Limited-*க்கு 10 ஏக்கரும்,* A & D Cosmic Power-*க்கு 25 ஏக்கரும்,* Deccan I Services-*க்கு 2 ஏக்கரும் ஒதுக்கி, அங்கே 200 பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். மேலும், ஆயிரம் பேர் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வெளி மாநிலத்திற்குச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]